செய்தி வெளியீடு எண்: 127 நாள்: 21.02.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 20.2.2018 அன்று தலைமைச் செயலகத்தில், பதிவுத்துறை சார்பில் காஞ்சிபுரத்தில் 4 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகக் கட்டடம் மற்றும் திருவள்ளூர், தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 4 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் பதிவுத்துறை அலுவலகங்களில், பதிவு ஆவணங்களைப் பராமரிப்பதற்கும், பணியாளர்கள் திறம்படப் பணியாற்றுவதற்கும், போதிய இடவசதி இல்லாததை கருத்தில் கொண்டும், பொதுமக்கள் அதிகம் வந்து செல்கின்ற சார்பதிவாளர் அலுவலகங்களில் பொதுமக்களுக்கு தக்க வசதிகள் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருதியும், வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் சொந்த கட்டடங்கள் கட்டும் திட்டத்தினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், காஞ்சிபுரத்தில் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகக் கட்டடம்; திருவள்ளூர் மாவட்டம் – பள்ளிப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டம் – பாப்பாநாடு, இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி கடலூர் மாவட்டம் – புவனகிரி ஆகிய இடங்களில் 2 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.கே. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ச.சந்திரமௌலி, இ.ஆ.ப., பதிவுத்துறை தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 21.2.2018